News and Articles in Tamil and English Please send them to:

THE EDITOR,
'The Morning Star,'
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
*Established 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol:- 155 Jaffna, Friday 11, February 1994 No: 03
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscriptio
Island : Rs. 100
*For Advertisements*
Apply to:
THE MANAGER
'The Morning Star,
Diocesan office,
Vaddukoddai

## MRS. INDIRANI LAWRENCE PASSES AWAY



Mrs. Pamela Indirani Lawrence the wife of the Rev. E. N. Lawrence, Worker-in-Charge of the Chavakachcheri Church was killed in the aerial bombardment of Thursday, 30th December 1993. The Rev. & Mrs. Lawrence worked in the Dutch Reformed Church for 25 years. Rev. Lawrence joined the ministry of the J. D., C. S. I., in September 1993. Their work was appreciated by the church and the community. Mrs. Lawrence leaves behind her husband the Rev. Edward Nainar Lawrence and daughter Juliana. Indirani was the daughter of Mr. & Mrs. D. J. Ponnuthurai of Varany and a sister of the Rev. P. Navendranugoolan, Worker - in - Charge, Kilinochchi. A Memorial Service was conducted on Saturday the 29th of January '94 at Varany her home town. Rev. E. N. Lawrence has decided to continue his ministry at Chavakachcheri.

## CONFIRMATION SERVICES

Confirmation Services were conducted in the following Churches of the J. D., C. S. I. during the months of December 1933 and January 1994.

On the 19th of December 1933, 35 persons were confirmed as full members of the Church in Vavuniya.

On Sunday the 26th of December 1993, 22 persons were confirmed at Murikandy Church. On the same day at Bharathipuram, 20 persons were confirmed.

On Sunday the 30th of January 1994 at the Confirmation Service at Alaveddy, 18 persons were confirmed as full members of the Church.

## BISHOP KENNETH AT CTS

Bishop Kenneth Fernando gave the keynote address at the Seminar on BEM Document. The Seminar took place at the Christian Theological College today.

## NEW BOYS' HOME IN JAFFNA TOWN

On Monday the 24th January a new Home for Boys was opened at 182, First Cross Street, Jaffna by the Bishop, the Rt. Rev. Dr. S. Jebanesan. It was named "Thirumarai Illam Boys' Home". The children of this Boys' Home were admitted to schools in Jaffna town.

## BISHOP KULANDRAN MEMORIAL HALL

On Thursday the 27th of January the new hall in the Undergraduate Department of Jaffna College at No. 464, Hospital Road, Jaffna was formally opened by the Bishop, the Rt. Rev. Dr. S. Jebanesan. This hall was named "Bishop Kulandran Memorial Hall". This hall erected with material available in Jaffna, will be able to accommodate 1000 persons. The function was presided over by Mr. G. Rajanayagam, Principal, Jaffna College, Vaddukoddai.

## VICE-CHANCELLOR RETIRES

Prof. A. Thurairajah, Vice-Chancellor of the University of Jaffna retites from his post at the end of March 1994. Ill health had made him to retire and accept the post of Vice-Chancellor of the Open University in Colombo. Prof. A. Thurairajah was Professor of Engineering at Peradeniya University for many years. He is a very loyal old boy of the American Mission College, Udupiddy and serves as the President of the Old Boys' Association.

## BISHOP'S VISIT TO AUSTRALIA

Our Bishop the Rt. Rev. Dr. S. Jebanesan visited Australia during first two weeks of December 1993. He preached in the Churches of Adelaide, Melbourne, Brisbane, Canberra and Sydney. The Alumni of Jaffna College in Sydney and Melbourne accorded our Bishop receptions in their cities. The Heads of the Anglican and the Uniting Churches of Australia organised meetings in different cities.

## C. S. I. YOUTH HOSTEL IN COLOMBO

The Rt. Rev. D. J. Ambalavanar laid the foundation stone for the C. S. I. Youth Hostel in Colombo on Sunday the 6th o February 1994 at 39, Fussels Lane, Wellawatte, Colombo 6.

## THE MOST REV. NICHOLAS MARCUS FERNANDO VISITS JAFFNA

The Most Rev. Nicholas Marcus Fernando, the Roman Catholic Archbishop of Colombo visited Jaffna on the 26th of January. The Rt. Rev. Kingsley Swampillai, Bishop of Trincomalee-Batticaloa and Rev. Alexander accompanied Archbishop on this visit. He saw Churches and other buildings destroyed by the aerial bomwardment in December 1993.

# WEDDINGS

Vino Gurupatham of Jaffna and Dharshini Thangarajah of Pandaterippu entered into Holy Matrimony on Saturday, 29th January 1994. The Marriage Sevice was conducted at the Uduvil Church.

The wedding of Kaneenthrawathey, daughter of Mr. & Mrs. Singarajah of Ariyalai and Sivanesan, son of Mr. & Mrs. M. Manikkam of Kokuvil took place on Wednesday the 2nd of February 1994 at St. Jame's Church, Nallur, Jaffna. Kaneenthrawathey is the clerk at Evelyn Rat nam Institute, Thirunelvely, Jaffna.

The marriage of Jeyaruban, son of Mr. & Mrs. T. Nesarajah of Chankanai and Mary Jebaruby, daughter of Mr. S. P. Jeevanantham, former Primary School Head, St. John's College and Mrs Jeevanantham of Ariyalai took place on Saturday, 29th January at St. Jame's Church, Nallur.

Mr. David Sathananthan Solomon son of Mr. S. Solomon and the late Mrs. Solomon of Uduppiddy married Kamini daughter of Mr. & Mrs. D. Ratnarajah of Vaddukoddai. The bride is a grand daughrer of the late Rt. Rev. S. Kulandran. The marriage service took place on Monday 27-12-1993 at the Cathedral Church Vaddukoddai.

The wedding of Doris daughter of Mr. & Mrs. R. Rajendra of Vaddukoddai to Mr. Jeddie son the late Mr. Reggie Fitch and Mrs. Fitch of Uduvil took place on Saturday the 5th February at the Cathedral Church Vaddukoddai.

## DIOCESAN COUNCIL 1994

The Council of the Jaffna Diocese of the Church of South India will meet on the 24th 25th and 26th of February 1994 at Vaddukoddai. About one hundred persons will participate in this Council this year.


## Mrs. BRYANT SELVARATNAM AIYADURAI GNANAMMA

Mrs. Gnanamma Aiyadurai passed away peacefully at her daughters residence at Chankanai on Friday 28th of January 1994. She was the mother in law of Mr. Muthiah Muthurajah of Chankanai. The funeral service took place at 8-00 a. m. in her residence. The Rev. D. C. Ratnasingham assisted by Mr. T. Jayachandran and Mr. S. J. Manikkam conducted the service,

She leaves behind Mr. A. Sabaratnam Mr. A. Atputharatnam, Mr. A. Jebaratnam (sons) and Mrs. Rani Vickneswaran, Mrs. Ruby Muthurajah Chankanai and Mrs. Ranji Muthurajah (Canada) daughters.

IN EVER LOVING MEMORY OF

## DR. S. JEYASEELAN



BORN — 30 — 01 — 1942
DIED — 29 — 11 — 1989

DAY OF ACTION, SUN,
AMBITION, LAUGHTER ;
NIGHT FOLLOWS
CLOSE WITH MILLIONS OF
STARS, SLEEP AND
RESTORING DARKNESS
— *WALT WHITMAN*

INSERTED BY
HIS WIFE AND CHILDREN

No. 10, Brandreth, Tusmore, Australia.

# உதயதாரகை

Estd. 1841

மலர்: 155 11 - 02 - 1994 இதழ்: 03


## ஞாபகார்த்த ஆராதனை

07-02-94-திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அமரரான கு நேசையாவின் பேரில் ஒரு ஞாபகார்த்த ஆராதனை சுண்டிக்குளித் தேவாலயத்தில் நடைபெற்றது. இவ்வாராதனையில் கொழும்பிலிருந்துவந்த அதி. வண. கெனத் பெர்னான்டோ, திருமதி சித்திரா பெர்னான்டோ, வண. கலாநிதி ரியன்ஸி பெரேரா, வண. கலாநிதி. டொனால்ட் கனகரத்தினம் ஆகியோர் பங்குபற்றினர், தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரசங்கம் செய்தார். ஆராதனைக்கு வந்தவர்கள் பின்னர் காலஞ்சென்ற நேசையா அவர்களின் குடும்பத்தினரால் உபசரிக்கப்பட்டனர்.

★

## ஞாபகார்த்தச் சிலுவை

சாவகச்சேரித் திருச்சபை குருமனை முன்றலில் காலஞ்சென்ற திருமதி இந்திராணி லோறன்ஸ் அவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு சிலுவை நாட்டப்பட்டது. அத்தியட்சர் எஸ். ஜெபநேசன் 06-02-94 ஞாயிற்றுக்கிழமை இதனை நாட்டி வைத்தார்.

★

## 25 வருட மணவாழ்வு!

நுணாவில் திருச்சபை ஊழியன் திரு. து. ஜெயச்சந்திரன் அவர்களும், திருமதி இரத்தினமலர் ஜெயச்சந்திரன் அவர்களும் 25 வருடகால மணவாழ்க்கையைப் பூர்த்தி செய்தமையைக் கொண்டாடுமுகமாக பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை ஒரு ஸ்தோத்திர ஆராதனை நடாத்தினார்கள்.

நுணாவில் தேவாலயத்தில் நடைபெற்ற இந்த வழிபாட்டினை வண. டி. ஆர். அம்பலவாணர் நடாத்தினார். அத்தியட்சர் எஸ். ஜெபநேசன் பிரசங்கம் செய்தார்.

★

## கத்தோலிக்கப் பேராயர் விஜயம்

கொழும்பு அதிமேற்றிராணியார், அதிவந்தனைக்குரிய நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை யாழ்ப்பாணத்திற்கு ஜனவரி மாதம் 25,26,27,28ஆம் திகதிகள் விஜயஞ் செய்தார். அவருடன் மட்டக்களப்புப் பேராயர் அதி. வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும், துறவறச் சபைத் தலைவர் வண. பிதா. அலெக்சாந்தர் அவர்களும் விஜயஞ் செய்தனர். இவர்கள் குண்டுவீச்சினால் சேதமடைந்த கட்டிடங்களை சுற்றிப் பார்த்தனர்.

★

## மெதடிஸ்த குழுவினர் விஜயம்

யாழ்ப்பாணம் வந்த மெதடிஸ்த திருச்சபைக் குழுவினர் இம்மாதம் 6ஆம் திகதி நமது அத்தியட்சரை அவரது இல்லத்திற் சந்தித்தனர். இலங்கையின் இனப்பிரச்சனை தொடக்கம் தமிழ்மக்களின் அவதிகள் பற்றியும் பல்வேறு விடயங்களைப் பற்றியும் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

# திருச்சி நினைவுகள்



யாழ் பிரதிஸ்தர்.

திருச்சி ஹீபர் கல்லூரி — இங்குதான் இந்த வருடம் சினட் மகாசபைக்கூட்டங்கள் ஜனவரி மாதம் 11ம் திகதி முதல் 16ம் திகதி வரை நடைபெற்றன. தென்னிந்தியாவின் மிக அழகான இடங்களில் ஒன்று பிஷப் ஹீபர் கல்லூரி என்பதனை எவருமே மறுக்க முடியாது! சாலைகளும் சோலைகளும் நிறைந்த இந்த அழகான வளாகத்தில் சினட் சபைக் கூட்டங்கள்!

அதிபர் டாக்டர் D. சுவாமிராஜ், மற்றும் துணையதிபர், டக்டர் ப சு. ஏசுதாசன் பம்பரமாய்ச் சுழன்று எம்மை உபசரித்தனர்.

கலைக்காவிரியினர் கலை விருந்து அளித்தனர்! இதற்குப் பொறுப்பாகவிருந்த வண. பிதா ஜோர்ஜ் என்னும் கத்தோலிக்க குருவானவரின் சாதனை எம்மை வியக்க வைத்தது. வட இந்தியாவிலுள்ள இந்துப் பல்கலைக் கழகங்கள் கூடத்தம்மை நிகழ்ச்சிகள் தரும்படி அழைக்கின்றனர் என்றார். கலைக்காவிரியின் பரதநாட்டியத்தைப் பார்த்துப் பிரமிப்பு அடைந்தோம்.

வழக்கம் போல முதலிரண்டு நாட்களும் தேர்தல் பரபரப்பு! தலைவர் பதவிக்கும் துணைத்தலைவர் பதவிக்கும் பொருளாளர் பதவிக்கும் கடும் போட்டி! சில பேச்சுக்கள் அருமையாகவிருந்தன. ''பன்மைச் சமுதாயத்தில் நற்செய்தி'' என்ற பொருளை சிலர் அருமையாக விளக்கினார்கள். திரு. நைனான் கோஷி, ஆக்ஸ்போர்ட் பேராயர், பஞ்சாப் பேராயர், பங்களாதேஷ் பேராயர் ஆகியோரின் கருத்துக்கள் சிந்தையைத் தூண்டின.

வழமை போல் இறையியற் கல்லூரி அதிபர்கள் எல்லோருமே வந்திருந்தனர். மிஷன் பங்காளிகளின் வரவு குறைவாகவிருந்தது. சமீபத்தில் சென்னையில் அவர்களின் கூட்டம் நடை பெற்றமை காரணமாகவிருக்கலாம்.

பெண்கள் தமக்கு வேண்டிய பிரதி நிதித்துவம் வழங்கப்படவில்லையென்று குமுறினார்கள். அடுத்த சினட் மகாசபையின் போது கூடுதலான பெண்களும் வாலிபர்களும் பிரசன்னமாகவிருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நற்செய்திப் பணியினரின் வருடாந்த விழா இனிமையாகவிருந்தது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட நால்வர் சாட்சியமளித்தனர். ஒருவர் தமிழர், ஒருவர் மலையாளத்தவர், ஒருவர் கன்னடக்காரர், ஒருவர் தெலுங்கர். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட தெலுங்குப் பெண்ணின் பாடலைக் கேட்டுப் பலர் கண்ணீர் சொரிந்தனர். இப்படி ஒரு சாமி (இயேசு) இருப்பது முன்னர் தெரியாமற் போய்விட்டதே என்று அப்பெண் கூறினார்.

மொத்தத்தில் திருச்சி சினட் சபைக் கூட்டங்கள் நன்கு ஒழுங்கு செய்யப்பட்ட கருத்துள்ள நிகழ்ச்சிகள்.

புத்தக உலகம்

# பாரதியும் கிறிஸ்தவமும்

'ஜோரா'



உலக மகாகவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி மறைந்து நூற்றிப்பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இப்பொழுது மாதந்தோறும் மறைந்து போன இக்கவிஞனைப் பற்றி நூல்கள் வந்துகொண்டேயிருக்கின்றன, பாரதியைத் தற்பொழுது பல்வேறு கோணத்தில் ஆராய்ந்து வருகின்றனர். முதுமாணி, கலாநிதிப்பட்டங்களுக்குப் பலர் பாரதியின் படைப்புக்களை ஆய்ந்து வருகின்றனர்.

திரு ''ஜோரா'' என்னும் கிறிஸ்தவத் தமிழ் அன்பர் ''பாரதியும் கிறிஸ்தவமும்'' என்ற தலைப்பில் ஒரு நூலை எழுதியுள்ளார். இதனைச் சென்னைப் பிரேம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

முகவுரையில் ஆசிரியர் 'ஜோரா' ஓர் இந்தியன் என்ற நோக்கில் மதப் பகைமை உணர்வு கொண்டோர் ஒரு சிலரையாவது சிந்திக்க வைக்கும் என்பதாலும், ஒரு கிறிஸ்தவன் என்ற நோக்கில், கிறிஸ்தவத்தோடு இந்திய ஞானச்சோலையில் மலர்ந்த ஓர் இந்து மகாகவியின் நெஞ்சம் கொண்டிருந்த பிணைப்பை எடுத்துக் காட்டியுள்ளோம் என்பதாலும், இந்நூலை உருவாக்கியதில் ஒருவித மனநிறைவை உணருகின்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூல் ''பாரதியும் கிறிஸ்தவமும்'' மதமாற்றம் எதிர்ப்புக்கள் ஏன்'' ''வேண்டாம் இந்த மதப் பகைமை'' என மூன்று இயல்களைக் கொண்டு விளங்குகின்றது.

பாரதிப்பித்தரான ''ஜோரா'' மகாகவி பாரதி கிறிஸ்தவத்தையும் நேசித்தார் என்பதனைக் காட்டுவதில் வெற்றிபெற்றிருக்கின்றார். இன்று இந்தியாவின் இந்து தீவிரவாதிகள் மகாகவி பாரதியையும் தமது கூடாரத்திற்குள் இழுத்துப் போட மிகவும் பாடுபடுகின்றனர். மகாகவி பாரதியின் இரண்டு முக்கியமான நண்பர்கள் கிறிஸ்தவர்கள் என்பதனை யாரும் மறுக்கமுடியாது ஒருவர் சுரேந்திரநாத் ஆர்யா' மற்றையவர் வெ. சக்கரைச்செட்டியார்.

மகாகவி பாரதியின் பாடல்களில் பொதுமை விளங்குகின்றது; சமயப் பொறுமை இழையோடி நிற்கின்றது

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம்)

பட்டதாரிப்பிரிவு

## யாழ்ப்பாணக்கல்லூரி பிஷப் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபம்

ஜனவரி மாதம் 27ம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரிப் பட்டதாரிப் பிரிவிலுள்ள பிஷப் குலேந்திரன் ஞாபகார்த்த மண்டபம் திறந்துவைக்கப்பட்டது. இந்த மண்டபம் யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, 464 என்ற எண்ணிலுள்ள வளாகத்தில் அமைந்துள்ளது.

இந்த மண்டபத்தைப் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரதிஷ்டை செய்து வைத்தார். அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்தில் அவர் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் உயர்கல்வித் தேவையைப் பட்டதாரிப் பிரிவு ஓரளவுக்கு நிவர்த்தி செய்யுமெனக் குறிப்பிட்டார். இந்த நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. ஜீ. இராசநாயகம் தலைமைதாங்கினார்.

குட்டிக்கதை

## அவனின் ஆயுதம்

ஒரு முறை சாத்தானுடைய காரியாலயத்தில் அவனைச் சந்திக்கச் சில பத்திரிகை நிருபர்கள் சென்றனர். அவனிடம் பல்வேறு ஆயுதங்கள் அவற்றிற்கு உரிய இடங்களில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. ஒரு ஆயுதத்திற்கு மாத்திரம் மிகச் சிறந்த இடம் அளிக்கப்பட்டிருந்தது. அதனை வெல்வெற் போட்ட தலையணையில் வைத்து ஒருவரும் தொடாதபடி கண்ணாடிப் பெட்டியில் வைத்திருந்தான்.

அந்த ஆயுதத்திற்கு ''சோம்பல்'' (LAZINESS) என்று பெயர்.

''சோம்பல்'' என்ற ஆயுதத்திற்கு ஏன் இவ்வளவு முக்கியத்துவம் என்று நிருபர்கள் கேட்டனர்.

ஓ! அதற்கு ஏன் அவ்வளவு கௌரவம் என்று கேட்கிறீர்களா?

அந்த ஆயுதத்தைக் கொண்டு தான் நான் பலரை என் பக்கம் கொண்டுவந்திருக்கிறேன்!

''மன்னாதி மன்னர்கள், அதி சிறந்த மேதாவிகள், கலைஞர்கள், மாணவர்கள், மாணவிகள் எல்லாருமே இந்த ஆயுதம் பட்டவுடன் வீழ்ந்திடுவர். பின்னர் சிறிது சிறிதாக என்னைத் தமது குருவாக ஏற்றுக் கொள்வர்'' என்றான் சாத்தான்.

தாரகை ஒளி

வாழ்க்கையென்பது ஒரு கலை. அதில் தேறுவது சுடமை வாழத் தெரிந்தவர்களாக இருப்பதே நாம் உலகத்திற்குச் செய்யும் தொண்டாகும்.

— மு. வ.

★ எங்கள் கருத்து ★

# தேவாலயங்கள் மீது தாக்குதல்

இலங்கைத்தீவின் உள்நாட்டுப்போர், இப்பொழுது உலகில் நடைபெறும் யுத்தங்களில் மிகவும் உக்கிரமானது என்பது அரசியல் அவதானிகளின் கணிப்பு. எனினும் ஸ்ரீலங்கா விமானப்படை சமீப காலம் வரை சிறிதளவு கட்டுப்பாட்டையும் ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடித்து வந்திருந்தது. இராணுவத்தாக்குதல் ஏற்படும் சமயத்தில் மக்கள் தேவாலயங்களுக்குள் புகலிடம் தேடினர், இந்தியப் படையும் இலங்கைப் படையும் தேவாலயங்களில் புகலிடம் தேடியவர்களைச் சுட்டுத்தள்ளவில்லை. தேவாலயங்கள் அடைக்கலம் வழங்கும் என்றே இறுதி வரை தமிழ் மக்கள் நம்பியிருந்தனர். இப்பொழுது அந்த நம்பிக்கையையும் ஸ்ரீலங்கா அரசு தகர்த்தெறிந்து விட்டது.

சென்ற வருடத்தில் துர்க்கை அம்மன் கோவில் தாக்கப்பட்டு வழிபாடு செய்துகொண்டிருந்தவர்கள் கொல்லப்பட்டனர். நவம்பர் மாதம் புனித யாகப்பர் ஆலயம் தாக்குதல்களுக்கு உட்பட்டது. வழிபடக்கூடியிருந்தவர்கள் கொல்லப்பட்டனர். டிசம்பர் மாதம் சாவகச்சேரி தேவாலயத்தின் மீது றொக்கட் தாக்குதல் நடைபெற்றது. போதகரின் மனைவி கொல்லப்பட்டார். இவை இன்றைய தமிழ் மக்களின் அவலநிலையை எடுத்துக்காட்டுகின்றன.

''யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். இதில் ஒன்றுமறியாத அப்பாவி மக்களும் கொல்லப்படுகின்றனர்; இதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது'' என்பதே அரசின் வாதம். அரசாங்கம் யாருக்குமே பதில் சொல்ல வேண்டியதில்லை என இறுமாந்து பேசுகின்றது. ''பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சாவு'' என்பது தமிழ்ப்பழமொழி. இன்று தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அட்டூழியங்களைக் குறித்து உலகம் அமைதியைக் கடைப்பிடிக்கிறது.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தியரினாலும், பபிலோனியரினாலும் அசீரியரினாலும், கிரேக்கரினாலும் துன்புறுத்தப்பட்டனர். அவர்களுடைய தேவாலயம் பலமுறை இடிக்கப்பட்டது. மக்கள் கைதிகளாகப் பிறநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஆனால் இஸ்ரவேல் சமுதாயம் அழியவில்லை மாறாக மென்மேலும் வளர்ந்து அரிய சாதனைகளை நிலை நாட்டியுள்ளது.

இஸ்ரவேல் புத்திரரின் வெற்றிக்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று கடவுள்மீது குன்றாத பக்தி, மற்றையது தமது தனித்தன்மையைப் பேணிக்காத்தமை, தம்மீது துன்பங்கள் திரும்பத் திரும்ப வந்தபொழுது அவர்கள் கடவுளை நொந்து கொள்ளவில்லை. மேலும் மேலும் பக்தி செய்தார்கள், மேலும் தூயவர்களாக வாழ விரும்பினார்கள். அதே சமயம் பிறநாட்டவர் தமது கலாச்சாரத்தில் தமது சமய நம்பிக்கைகளில் ஊடுருவல் செய்வதனை நஞ்செனெ வெறுத்தார்கள். இந்த இரண்டு அம்சங்களும் இஸ்ரவேல் சமுதாயத்தை வாழவைத்தன.

இன்று நாம் எதிர்கொள்ளும் அரசாங்கம் மிகவும் பலம் வாய்ந்தது. உலகின் பல பாகங்களிலிருந்தும் நுட்பமான ஆயுதங்களைக் கொள்வனவு செய்து போரை நடாத்துகின்றது. தமிழ் மக்கள் வேதனை சொல்லிடங்காது.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

வேதனையினால் சிந்தப்படும் கண்ணீர்தான் சக்திவாய்ந்த படையை அழிக்கும் சாதனம் என்றார் வள்ளுவப்பெருந்தகை. தேவாலயங்கள் மீது தாக்குதல் தொடரலாம். ஆனால் நாம் நம்பிக்கையிழக்கத் தேவையில்லை. உலகத்தை ஆரம்பித்தவர் இறைவன். அவரே அதனை முடித்து வைப்பார்.

# வட்டுக்கோட்டை பேராலயம்



இது தான் வட்டுக்கோட்டைப் பேராலயம். 1626ஆம் போர்த்துக் கேயரினால் கட்டப்பட்டது. இதிலேதான் அவர்களுடைய கோவிற்பற்றுப் பள்ளிக்கூடமும் (Parish School) நடைபெற்றது கிராமத்தின் நிர்வாகமும் கோவிற் பற்றுப்பள்ளிக்கூடத்தைமையமாகக் கொண்டிருந்தது.

1678ஆம் ஆண்டு ஒல்லாந்தர் இதனைப் புணருத்தாரணம் செய்தனர். லோறன்ஸ் பில் என்ற யாழ்ப்பாணத்துத் தளபதி இதனைச் சீரமைத்தார்.

ஆனால் 1796ல் ஆங்கிலேயர் மதச் சுதந்திரத்தினை நமது நாட்டு மக்களுக்கு வழங்கியபோது இது கைவிடப்பட்டது. கட்டிடம் சேதமடைந்தது.

1816ஆம் ஆண்டில் அமெரிக்கன் மிஷனரிமார் இதில் வழிபாட்டை மீண்டும் தொடங்கினார்கள் இதனைப்பற்றி 1816ஆம் ஆண்டு வந்த வண றிச்சேட் அவர்களும் வண மெக்ஸ் அவர்களும் எழுதிய குறிப்புக்கள் சுவாரஸ்யமானவை:—

''இந்தத் தேவாலயம் மிகப் பெரியதாகவும் கம்பீரமானதாகவும் இருக்கின்றது. வெளிப்பக்கத்தில் இதன் நீளம் 163 அடி இதன் சுவர்கள் 4 அடி அகலமானவை இதன் அகலம் வெளிப்புறத்தில் 65 அடி உட்புறத்தில் 57; அடி சுவர்கள் அதிகம் உயரமானவையல்ல. ஆலயங்களுக்குள் பலகணிகள் (Galleries) வைக்கும் மரபு இந்த நாட்டில் இல்லை. இந்த ஆலயத்திற்கு இப்பொழுது கூரையில்லை. ஆனால் சுவர்கள் மற்றும் வளைவுகள் என்பன அப்படியே இருக்கின்றன..... தேவாலயத்தின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை, கட்டிடத்தின் நடுப்பகுதியில் இரண்டு வரிசையான தூண்கள் காணப்படுகின்றன. இந்தத் தூண்களின் தொகை 20; ஒவ்வொன்றின் சுற்றளவு 10 அடியாகும். இவை 18 வளைவுகளையும் தாங்கி நிற்கின்றன.''

# 150 வருடங்களுக்கு முன்னர் புதின சங்கதி

வட்டு நகர் சாஸ்திர பள்ளிக்கூடத்திற் சில வருடங்களாகப் படித்து இங்கிலிசிலுந் தமிழிலுமிக்கவரும் மகா கனம் பொருந்திய ய. எ. எ. தண்டிகை பொன்னம்பல முதலியார் குமாரருமாகிய சின்னக்குட்டிப்பிள்ளையவர்கள் தெல்லியம்பதியிலுள்ள மாவிட்டபுரம் வேளாள குலத்துயர்ந்த, யோக்கிய, பாக்கிய, சலாக்கிய, சிலாக்கிய நன்னெறியுடையவராய் நியாயசாஸ்திரங்களைக் கற்றபின் பரிசோதிக்கப்பட்டு, வலிகாமம் டிஸ்திறிக்கட் கோட்டுத் தரணியாக நியமிக்கப்பட்டார். மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து போய்க் கொழும்பிலிருந்து சில வருட காலமாக இங்கிலீசுப் பாஷையைப்படித்து நல்லொழுக்கத்தில் மேற்பட்டவரான எ. எ. சபாபதிப்பிள்ளை குமாரர் சிங்கநாயகம்பிள்ளை முதலியாரவர்கள் காலஞ்சென்றுபோன சூசைப்பிள்ளை முதலியாரிடத்திற்கு நியமிக்கப்பட்டார்.

உதயதாரகை 22-2-1844

## புதிய துணைவேந்தர் தெரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கவுன்சில் இம்மாதம் 26ம் திகதி கூடிப் புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்யவிருக்கிறது.

## யாழ்ப்பாண வரலாறு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினர் யாழ்ப்பாண வரலாறு ஒன்றினைத் தொகுப்பதில் ஈடுபட்டுள்ளனர். இதன் ஆலோசனைக் குழுவிற்குப் பேராசிரியர் துரைராசா துணைவேந்தர் தலைமைதாங்குகின்றார். உள்நாட்டிலும் பிறநாடுகளிலும் வாழ்கின்ற அனேக அறிஞர்கள் இத்தொகுப்புக்குக் கட்டுரை வழங்கவுள்ளனர்.

## ஈவ்லின் இரத்தினம் நிறுவனம்

ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நிறுவனத்தின் புதிய இயக்குனராகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுனர் சபையினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணக் கல்லூரிப் பரிசளிப்பு விழா இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. கொழும்பு ஆயர் மேதகு கென்னத் பெர்னான்டோ அவர்களும் சித்ரா பெர்னான்டோ அவர்களும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

## நாவேந்தன் பாராட்டு விழா

முதுபெரும் தமிழ் எழுத்தாளர் ''நாவேந்தன்'' அவர்களைப் பாராட்டும் விழாவொன்று அவருடைய பழைய மாணவர்களால் நடாத்தப்படவிருக்கிறது. இவ்விழா இம் மாதம் 19ம் திகதி சனிக்கிழமை சுன்னாகம் பொதுமக்கள் நூல்நிலைய மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

# பாரதியும் கிறிஸ்தவமும்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

''ஜோரா'' அவர்கள், பாரதி கிறிஸ்தவத்தைப் பற்றிப் பல்வேறு இடங்களில் எழுதிய குறிப்புக்களை ஆதாரமாகக் காட்டி இந்த உண்மையை நிறுவுகின்றார். பின்வரும் பகுதி ''ஜோரா'' தரவுகளைக் கையாண்டிருக்கும் முறைக்குச் சான்று.

சிலுவை பற்றிப் பாரதியார் எழுதிய பகுதியைக் கையாண்டிருக்கும் விதம் போற்றுதற்குரியது.

''யூதர்களை ரோம தேசத்தார் வென்று, யூதநாட்டில் பிலாத்து ரோமன் ராஜாதிகாரியாய்ப் போய் விட்டான். இயேசு கிறிஸ்து தெய்வத்தை நம்பி விடுதலையை முழக்கினார் யூதருக்குள்ளே, அவருக்கு விரோதமாய் அன்னியனான அதிகாரியிடம் கோள்மூட்டிவிட்டார்கள். உள்ளூர் யோக்கியர்கள், வெளிநாட்டு யோக்கியர்கள் எல்லோருமாகச் சேர்ந்து கிறிஸ்துவைச் சிலுவையில் அடித்துக்கொன்றார்கள். ''கிறிஸ்து மதத்தையே கொன்றுவிட்டோம் என்று அந்த மூடர்கள் நிச்சயித்தார்கள். இன்று கிறிஸ்துமதம் உலகம் முழுவதையும் சூழ்ந்து நிற்கின்றது. வருந்தினால் வாராதது ஒன்றுமில்லை.''

''பாரதியாரின் இக்கட்டுரைப் பகுதியைப் படிக்கும்பொழுது இரண்டு விஷயங்கள் வெளிப்படுகின்றன, ஒன்று கிறிஸ்தவ மத வரலாற்றினைப்பற்றி பாரதியார், நன்கு அறிந்து வைத்திருக்கிறார். என்பது. இன்னொன்று பாரதியாருக்கு கிறிஸ்தவத்தின் மேலுள்ள அபிமானம்.''......

...''கிறிஸ்து மதத்தையே கொன்றுவிட்டோம் என்று அந்த மூடர்கள் நிச்சயித்தார்கள்'' என்னும் பொழுது கிறிஸ்தவப் பகைமையாளர் மீது பாரதிக்குள்ள வெறுப்பு வெளிப்பட்டிருக்கிறதல்லவா? இதைக்கொண்டு பாரதிக்கு கிறிஸ்து மேலுள்ள அபிமானம். இயேசுவின் பரித்தியாகத்தின் மீதுள்ள பற்று இவைகளைப் பார்க்க முடிகிறது'' என்கிறார் ''ஜோரா''

இவ்வாறு பாரதிநேசனாகிய ''ஜோரா'', கிறிஸ்தவத்தை, பாரதி அன்புடன் அணுகினார் என்று பல்வேறு வழிகளால் எடுத்துக்காட்டுகின்றார். இவருடைய முயற்சி பாராட்டுக்குரியது. மகாகவி பாரதியை எல்லோருமே போற்றவேண்டும் என்ற எண்ணம் இந்த நூலின் மூலமாக நிறைவேறுகின்றது. தமிழன்பர் 'ஜோரா'' இவ்வாறே இராமலிங்கரும் கிறிஸ்தவமும்' 'பாரதிதாசனும் கிறிஸ்தவமும்' 'ராஜாஜியும் கிறிஸ்தவமும்', என்று புதுப்புது ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

— தாரகை அண்ணா

## ● EDITORIAL ●

# THE LENT

This year the Ash Wednesday falls on the 16th February. From that day till Easter the Church observes Lent. Lenten days are very significant in the life of the Church for it inspires us to renew our fellowship and spiritual life in Christ. The Lent is also important because it is associated with Jesus' fasting and praying. He prepared Himself through fasting and prayers in order to overcome his temptation and fulfill the God's mission through his death on the cross. We also must prepare ourselves to have a successful life in Christ through fasting and prayers

Ash is the symbol of humility and penitence of our sins. Job humbled himself before the Lord and repented in dust and ashes. David when he realized that he had sinned against Uriah confessed his sins and repented. People of Niniveh put on sackclothes and repented by fasting; they were saved from destruction.

Jesus proclaimed "Repent for the Kingdom of Heaven is at hand" John the Baptist admonished; asked the people to show fruits of repentance by sharing their wealth with others. We should examine ourselves during this Lenten season. There are many in this country who have lost everything. We have amongst us the naked, the hungry and the homeless. But we have never tried to help them. We never clothed the naked even though we have unwanted clothes in our closets. We never fed the hungry but spend lavishly at birthday parties and at weddings. Many live under the trees and in makeshift houses whereas many have locked up spare rooms. When many fall dead on the wayside we walk on regardless. It is time we repent and turn back.

Jeremiah lamented that the City of Jerusalem had become like a widow and her gates are desolate; she has become a vassal; all her friends have become her enemies. All her children have gone away and there is no one to care for her. No one comforts her. There is no one to believe her story, so Jeremiah had to lament.

When Nehemiah heard that Jerusalem was but a heap of ruins he sat down, wept and mourned for days; and continued fasting and praying before the Lord God of Heaven. Are not our bowels churned up when we hear the distressing news about our people and our land? If we really love our land and people, we must fast and pray for the deliverance of our people. People are dying, and the land is being destroyed. Only God can save us, so it is our duty to confess the sins of all our people and intercede for them. This is what Moses did; and what people like Nehemiah did; so we must also do.

When we fast and pray for the oppressed, the downtrodden and the poor, we are in solidarity with them. Solidarity means compassion. That means we try to help them; we stand by them in their struggle for justice. In doing so we share in their suffering. When we suffer, we carry their burdens. The burdens are thus shared and this leads to material help. We help others in their struggle and they in turn help us, and there is a strong binding force which unites us. God who suffers with us also unites himself with us. When God and we UNITE we receive strength from Him; we UNTIE or break the bondages of the oppressive forces and are liberated. This liberation power we receive through fasting and prayer.

Let us therefore commit ourselves to Christ to carry his mission in our own context where people are enslaved.



**PROF. K. NESIAH**

**A service to thank God for the life and work of Professor K. Nesiah was conducted on Monday 7th February at St. John's Church Chundikuli. Bishops Kenneth Fernando, Jebanesan, Rev. Dr. Rienze Perera, Rev. Dr. Donald Kanagaratnam & Mrs. Fernando participated at this service.**

## THE SYNOD OF THE CHURCH OF SOUTH INDIA

The Twenty-fourth sessions of the Synod of the Church of South India met at Trichy between the 11th and 15th of January 1994. The theme of the sessions this year was "Gospel in a Plural Society".

The following were elected office-bearers for the biennium 1994 – 1996 :

| | |
|---|---|
| Moderator | — The Most Rev. Vasant P. Dandin |
| Deputy Moderator | — The Rt. Rev. Dr. D. Paulraj |
| General Secretary | — Prof. George Koshy |
| Treasurer | — Mr. Fredrick William |

The following members of the Jaffna Diocese of the C. S. I. were elected to serve in the undermentioned boards and committees.

| | |
|---|---|
| Chairman, Statistics Committee | — The Rt. Rev. Dr. S. Jebanesan |
| Member, Statistics Committee | — Mr. N. A. Vimalendran |
| Ministerial Committee | — The Rev. D. S. Thiagarajah |
| Council for Mission & Evangelism | — The Rev. V. N Tharmakulasingam |
| Marriage Questions Committee | — The Rev. Anthony A. Paul |
| Urban Industrial Mission | — The Rev. S. Jeyanesan |
| C. S. I. Council for Education | — Mrs. E. S. Jeyanesan |
| Committee on Laity Work | — Mr. Milroy R. Selvarajah |
| Union Negotiations Committee | — The Rev. S. Jeyanesan |
| Liturgy Committee | — The Rev. A. Jeyakumaran |
| Theological Commission | — The Rev. D. S. Thiagarajah |
| Youth Board | — Miss Subodini Philips |
| Relief & Development Committee | — The Rev. S. Jeyanesan |
| C. S. I. — C. T. V. T. | — Mr. Noel S. Thampoe |
| Committee on VELCOM | — Mr. G. Rajanayagam |
| Committee on Communications | — Mr. L. Selvarajah |
| Christian Education Department | — Mrs. Thaya Thiagarajah |
| Ecumenical Relations Department | — Mrs. E. V Rajaratnam |
| Committee on Ecological Concerns | — Mrs. I. Jeyakumaran |
| Women's Christian College, Madras | — Miss C. V. Selliah |
| Court of the Synod | — The Rt. Rev. Dr. S. Jebanesan |

# OBITUARY

**Nellie Jane Godfrey Porter, Born 3 November 1908, died 22 January 1994**

Born in Seattle, the mother of Dr. Robert G. Porter, Missionary of Jaffna College, attended the University of Washington and became a Registered Nurse. She married in August 1931 and went by honeymoon ship along the Pacific Coast to San Francisco, California. Robert D. Porter had taken a job in Richmond, California, with Standard Oil. She went on with him to San Francisco Theological Seminary in San Anselmo and gave birth to M. Porter sister Mary while his father was doing his student pastorate work.

In 1950, after they had held the Presbyterian Student Chaplaincy at the University of Washington, Mrs. Porter again took up nursing, eventually as Travelling Public Health Nurse and Television Demonstrator. When they went to Alaska in 1965, she became a School Nurse in 1975, where they became staunch supporters of the Immanuel Presbyterian Church in Bothell.

Mrs. Porter held the family together – the cousins and their several children, her counsins and their large families; and she kept track of their students' children and grand children. And while Dr. Porter was growing up she kept his fathers's parents in the home as well as two cousins. At the University of Washington, they had roomers and boarders from China and Switzerland as well as the U. S. Nellie Porter had spent the last several years in Nursing-Home care, but always mentally alert.

**Mrs. Alice Muththumani Ariaratnam**

We are sorry to record the death of Mrs. A. M. Ariaratnam wife of Mr. R. Ariaratnam of Hospital Road Jaffna which took place on friday 4th February 1994 at her residence. The funeral service was conducted on the following day by the Rev. A. W. Jebanesan. Mrs. Ariaratnam was a lady of deep piety and wanted her earthly possessions to go to the Church after her demise.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No. Q / J / 140 / 89 News Printed for the Jaffna Diocese of The Church of South India The American Ceylon Mission Press, 182, 1st Cross Street, Jaffna on Friday the 11th of February 1994 and Published by [illegible] – Diocese Office Vaddukoddai.